DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 19/2020**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சேதுபதி | Caste | : | |
| Father Name | : | சேகர் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **05.03.2026.**

**PW - 24**

**(1** முதல் **6** எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் கரூர் மாவட்டம், கோவிந்தம்பாளையத்தில் வசிக்கிறேன். தற்போது திருப்பூரில் உள்ள ஒரு பனியன் கம்பெனியில் பராமரிப்பு பிரிவில் வேலை செய்கிறேன். இதற்கு முன்பு அந்தமானில் இந்திய கப்பற்படையில் போசன் என்ற பதவியிலிருந்தேன். சாட்சி கிஷோரை தெரியும். அவரது நண்பர் அசா.6 ஹரிபாலுவை தெரியும். திருச்சியில் உள்ள ஜூம் கார்ஸ் என்ற நிறுவனத்தில் கார் வாடகைக்கு விடுவார்கள். அது ஆப் மூலம் செயல்படும் நிறுவனமாகும். நான் அதில் லாக்இன் செய்து வைத்திருந்தேன். நான் வெளியூரில் இருந்ததால் என் நண்பர் கிஷோர் எனது ID –யை பயன்படுத்தி மேற்படி நிறுவனத்தில் கார் வாடகைக்கு எடுப்பார். இந்த வழக்கு தொடர்பாக என்ன நடந்தது என்று எனக்கு

தெரியாது. இந்த வழக்கில் இறந்துபோன கார்த்திக் என்பவரை தெரியாது. என்னை போலிசார் விசாரிக்கவில்லை.

*(சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)*

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அதில் 23.05.2019 அன்று எனது நண்பர் கிஷோர், அவரது நண்பர் ஹரிபாலன் என்பவருக்கு எனது அடையாள அட்டையை வைத்து திருச்சி ஜூம் கார்ஸ் நிறுவனத்தில் காரை வாடகைக்கு எடுத்து கொடுத்தார் என்றால் கிஷோர் வாடகைக்கு எடுத்தது மட்டும் தெரியும். அவர் யாருக்கு கொடுத்தார் என்று தெரியாது. கிஷோர் அந்த வாடகை காரை  ஹரிபாலனுக்கு கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. ஹரிபாலன் அந்த காரில் எரகுடிக்கு சென்றார் என்றும், அங்கு அவர் அதை 25.05.2019 அன்று அவரது நண்பரான கார்த்திக் என்பவருக்கு ஓட்ட கொடுத்துள்ளார் என்றும், அவர் டிரைவிங் தெரியாமல் அதை ஓட்டினார் என்றும். அந்த காரை எரகுடி விஏஓ அலுவலகம் அருகே ஓட்டி கார்த்திக், சிதம்பரம் என்பவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றும், அதனால் சிதம்பரத்தின் உறவினர்கள் கார்த்திக்கை அடித்ததாகவும், பின்னிட்டு கார்த்திக் இறந்துவிட்டதாகவும் கேள்விபட்டேன் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1, 3 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2019 மே மாதம் நான் அந்தமான் தீவில் இருந்தேன். அந்த காலகட்டத்தில் எனது அடையாள அட்டை என் நண்பர் கிஷோரிடம் இருந்தது.

நான் 2019 ஜுலை மாத வாக்கில் இந்தியா வந்தேன். மீண்டும் ஒரு மாதத்தில் அந்தமான் சென்றுவிட்டேன். அதன்பிறகு 2020 மார்ச்சில் இந்தியாவிற்கு திரும்ப வந்தேன்.

**2 ஆம் எதிரி தரப்பில் இதே குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.